**டிசம்பர் -4**

**பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரம பிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக்கொள்கிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா? -லூக்-11.13.**

தாங்கள் கர்த்தரின் ஆவியை, பரிசுத்தத்தின் ஆவியை, சத்தியத்தின் ஆவியை, கிறிஸ்துவின் ஆவியை, தெளிந்த புத்தியுமுள்ள ஆவியை அதிக அளவு பெற்றவர்களாயிருக்க வேண்டுமென்றுள்ள ஜீவியத்தின் பிரதானமான நோக்கமும் தங்களுடைய ஜெபங்களின் பாரமுமான இந்த முக்கிய விஷயத்துக்கு, கர்த்தருடைய பிரதிஷ்டை செய்த எல்லா ஜனங்களும் தங்களுடைய கவனத்தைச் செலுத்துவர்களானால், அது எவ்வளவு பெரிய ஆசிர்வாதமாயிருக்கும். அப்படியானால்,அவர்கள் விடியுமளவும் கர்த்தருடன் போராடவேண்டும்.அவரைப்பற்றி கொண்டிருப்பது விரும்பப்படுகிற ஆசிர்வாதத்தை நிச்சயம் கொடுக்கும். அவர்களுக்கு இந்த ஆசிர்வாதத்தைக் கொடுக்க வேண்டுமென்கின்ற ஒரே நோக்கத்திற்க்காகவே, கர்த்தர் தம்முடைய ஜனங்களுக்குத் தம்மை வெளிப்படுத்தியிருக்கிறார். ஆயினும், அவர்கள் அதை உயர்வாக மதிக்கவும், ஊக்கமாக அதை அடையவிரும்பும் வரைக்கும், அதைக் கொடாமல் நிறுத்தி வைக்கிறார்.

**-Z 01, 271. (2864).**

நம்முடைய கர்த்தர் தம்முடைய சீஷர்களிடத்தில் அவர்கள் பொல்லாதவர்களாயிருக்கிறார்கள் என்று சொல்லும்போது, அவர்களுடைய நோக்கங்கள் பொல்லாதவைகள் என்று அவர் குறிக்கவில்லை.இன்னும் சரியாகக் கூறுமிடத்து, அவர்களுடைய மனதிலும், இருதயத்திலும் விழுந்துபோயிருக்கிறார்கள் என்பதைக் குறிப்பிடுகிறார் என்றாலும், இன்னமும் தேவனுடைய சாயலின் அடையாளங்கள் அவர்களிடத்தில் இருக்கிறதாக அவர் குறிப்பாகச் சொல்கிறார். அதனால் அவர்கள் தங்களுடைய பிள்ளைகளுக்கு இயற்கையான நல்ல ஈவுகளை எப்படிக் கொடுக்கவேண்டும் என்று அறிகிறார்கள்.கொடுக்கச் சாத்தியமாக்கப்படுகிறார்கள். வரையற்றவிதமாகப் புராணமாயிருக்கிற தேவன் அதிக நன்மை செய்யக்கூடும்.அதாவது அதை அவருடைய கையிலே கேட்க்கின்ற தம்முடைய பிள்ளைகளுக்குத் தம்முடைய பரிசுத்த ஆவியைக் கொடுக்கக்கூடும். கொடுப்பார் என்று சில நல்லவைகளைச் செய்யக்கூடிய அபூரண மனிதரின் மூலமாக அவர் காரணம் காட்டுகிறார்.பரிசுத்த ஆவியின் ஈவு மிகவும் உயர்வான ஆவிக்குரிய ஈவாக இருக்கின்றது. உண்மையாகவே, இது தற்காலத்தில் நாம் பெற்றுள்ள எல்லா ஆவிக்குரிய ஆசிர்வாதங்களின் திரட்சியாயும், நம்முடைய நித்திய சுதந்திரத்தின் அச்சாரமுமாயுமிருக்கிறது. ஆகையால், பரிசுத்த ஆவிக்காக நாம் செய்கிற வேண்டுதல்களே நம்முடைய பராமபிதாவுக்கு நாம் ஏறெடுக்கிற நம்முடைய எல்லா ஜெபங்களின் முக்கிய பாரமாக இருக்க வேண்டும். தேவன் தம்முடைய சொந்த ஜனங்களுக்கு இதைக் கொடுக்கின்றார். **-P 30,183,184.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

**சங்-103.13, நீதி- 1.23, யோவே 2.29, மத் 7.7-11, மாற்-11.24, யோவா-14.16, 15.7, 4.10, எபே- 1.3,**

**தீத்-3.4-5.**

**கோபுர வாசிப்பு : Z 15,38 (R 5623).**

**வினாக்கள் : இந்த வாரத்தில் நான் பரிசுத்த ஆவிக்காக ஜெபித்தேனா? எவ்வாறு? ஏன்? பலன் என்ன?**